# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW - 8 / PW - 30**

Name : முருகையன் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **28.07.2025**

**(1, 2, 4, 5, 6, 7, 8, 9, 13, 20, 21, 22, 23, 24, 26, 27, 29, 30** எதிரிகளுக்காக குவிமுச **317** மனு ஏற்பு. **3, 11, 28** எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department** 09.12.2024 தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காலனியில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் பறையன் சாதியைச் சார்ந்தவர். ஆஜர் எதிரிகளும், இன்று ஆஜராகாத எதிரிகளும் என் ஊர்க்காரர்கள்தான். அவர்கள் எல்லாம் படையாச்சி சாதியைச் சார்ந்தவர்கள். சுமார் 6 வருடத்திற்கு முன்பு சம்பவம் நடந்தது. அப்பொழுது ஊரில் எலக்சன் நடந்தது. அப்பொழுது திருமாவளவன் பானை சின்னத்தில் நின்றார். திருமாவளவனுக்கு எதிராக மாம்பழக்காரர்கள் இரட்டை இலை சின்னத்தில் நின்றார்கள். மாம்பழக்காரர்களுக்கு ஊர்க்காரர்கள் சப்போர்ட் செய்தார்கள். நான் அந்த தேர்தலில் ஓட்டு போட்டேன். நான் 01.00 மணிக்கு ஓட்டு போட போனேன். அதற்கு முன்னால் என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது. ஓட்டு போட்டு விட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்பு நான் தூங்கிக்கொண்டிருந்தபோது 03.00 மணிக்கு சத்தம் கேட்டது. நான் எழுந்து வெளியே வந்து பார்த்தேன். நிறைய பேர் கொம்பு குச்சியோடு காலனிக்குள் வந்தார்கள். வந்த ஆட்கள் வன்னியர் ஆட்கள். அவ்வாறு

வந்த ஆட்களில் எதிரிகள் இருந்தார்களா என்றால் நிறைய பேர் இருந்தார்கள். அதில் எதிரிகள் இருந்தார்களா என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது. வீடுகளை அடித்து உடைத்தார்கள். என் வீட்டையும் உடைத்துவிட்டார்கள். வீட்டு பண்ட பாத்திரங்களையும் உடைத்துவிட்டார்கள். இவனுங்க ஏன் பானைக்கு ஓட்டு போடுகிறார்கள் என்று சொல்லி தேவிடியா மகனே, குச்சிக்காரி மகனே என்ற வார்த்தைகளால் திட்டினார்கள். பறையன் என இழிவாக பேசினார்கள். எல்லாம் முடிந்த பிறகு நான் வெளியே வந்தேன். அப்போது என் வீடும், நிறைய வீடுகளும் உடைந்து இருந்தது. குணசீலன் என்பவர் காவல் துறைக்கு போன் செய்தார். வடிவேல் என்பவருக்கும், ரவி என்பவருக்கும் மற்றும் 7, 8 ஆண், பெண்களுக்கும் காயம். காயம்பட்டவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு போனார்கள். இது சம்பந்தமாக SP என்னை விசாரித்தார்.

<u>மேற்சொன்ன சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பகுதி பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்த போது வன்னியர் சாதியை சேர்ந்த பாமக கட்சிக்காரர்கள் முருகேசன், செல்வகுமார், அருள்மணி, ராஜேஷ், அஜித், திருகுமரன், ராஜா, சங்கர், பாண்டியராஜன், வினோத், பிரேம்குமார், விஜய்குமார், சத்தியசங்கர், ராசா, பாஸ்கர், மதியழகன், வெற்றிவேல், ஆனந்தன், சரவணன், இளையராஜா, குமார், பிரபு, கொளஞ்சிநாதன், குமார், பாலமுருகன், ராமகிருஷ்ணன், வேலு, செல்வகுமார், சொக்கன், ஜீவா, சக்திவேல், சங்கர் என்கிற குட்டி, வாசுதேவன் ஆகியோர்கள் ஒன்றாக வந்து தாக்கியதாக சொல்லிருக்கிறேனா என்றால் இல்லை. போலீஸ் விசாரித்தபோது சாதி கலவரத்தால் தான் செய்தார்கள் என்று சொன்னேன். இன்னார் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. என் வீட்டை அடித்து உடைத்ததில் 7,000/- சேதம் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொன்னேன். வீட்டை போட்டோவும் எடுத்தார்கள். செல்வகணபதி, செல்வராசு, பிரகாஷ், மணிமேகலை, கொளதமி, ராஜேந்திரன், ரவி, வடிவேல், வெற்றிவேல், கிருஷ்ணமூர்த்தி, அன்பழகன் ஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயங்கொண்டம் அரசு

மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவம் நடந்த சமயத்தில் போலீஸ் விசாரித்தபோது ஊர்க்காரர்கள் பெயரை சொல்லிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.</u>**

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஓம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW - 21 / PW - 31**

Name : கிருஷ்ணமூர்த்தி Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **28.07.2025**

**(1, 2, 4, 5, 6, 7, 8, 9, 13, 20, 21, 22, 23, 24, 26, 27, 29, 30** எதிரிகளுக்காக குவிமுச **317** மனு ஏற்பு. **3, 11, 28** எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.**)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department 09.12.2024** தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காலனியில் குடியிருக்கிறேன். நான் பறை சாதியைச் சார்ந்தவர். நான் கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளும், இன்று ஆஜராகாத எதிரிகளும் என் ஊர்க்காரர்கள்தான். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எல்லாம் வன்னியர் சாதியைச் சார்ந்தவர்கள். சுமார் 6 வருடத்திற்கு முன்பு இந்த சம்பவம் நடந்தது. அப்பொழுது ஊரில் எலெக்சன் நடந்தது. அப்பொழுது திருமாவளவன் எங்கள் சாதிக்காக பானை சின்னத்தில் நின்றார். திருமாவளவனுக்கு எதிராக மாம்பழக்காரர்கள் மற்றும் அதிமுக கட்சியில் நின்றார்கள். நான் ஓட்டு போட போகும்போது பறதேவிடியா பசங்க நம்மள எதிர்த்து ஓட்டு போட்டுவிடுவாங்களா, ஜெயித்துடுவாங்களா என்று பேசிக்கொண்டிருந்தார்கள். நான் 01.30 மணிக்கு ஓட்டு போட போனேன். ஓட்டு போட்டு விட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்பு கொஞ்சம் நேரம் கழித்து சத்தம் கேட்டது. அப்பொழுது நான் வெளியே வந்து பார்த்தேன். நிறைய பேர் பற தேவிடியா பசங்களா என்றும் ஓட்டு போட்டீங்களா என்றும் சத்தம் போட்டுக்கொண்டு வந்தார்கள்.

எங்கள் தெரு முனையில் இறக்கத்தில் இருந்த DPI கொடி கம்பத்தை அடித்து உடைத்துவிட்டார்கள். அவ்வாறு அடித்து உடைத்தவர்களில் ஆஜர் எதிரிகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவர்களில் சில பேர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. முருகேசன், கொளஞ்சி, ராஜா ஆகியோர்கள் இன்று வரவில்லை. ஆஜர் எதிரி சொக்கன் நீதிமன்றத்தில் இருக்கிறார். மற்ற எதிரிகளின் பெயரை தற்போது என்னால் சொல்ல முடியவில்லை. நான் கொடி கம்பத்திற்கு கிட்டே போனேன். கருங்கல் என் மேலே வந்து விழுந்தது. அதில் என் விலாவில் காயம் ஏற்பட்டது. நான் மயங்கி விழுந்துவிட்டேன். என்னை என் வீட்டிற்கு தூக்கி போய் ஒத்தடம் கொடுத்தார்கள். அப்போது காலனி வீடுகளை அடித்து, நொறுக்கிக்கொண்டே போனார்கள். அவர்கள் கையில் கத்தி, உருட்டு கட்டை, இரும்பு தடி, பாட்டில் பெட்ரோல் குண்டு, பெட்ரோல் கேன் ஆகியவைகளை வைத்திருந்தார்கள். வீட்டை அடித்து நொறுக்கினார்கள். 13 பேருக்கு காயம் ஏற்பட்டது. காயம் ஏற்பட்டவர்கள் பிரபு, கிருஷ்ணமூர்த்தி, செல்வகணபதி, ரவி, வடிவேல், ராஜேந்திரன், மனோன்மணி ஆகியோர்கள் ஆவார்கள். 10, 15 பைக்குகள் சேதமானது. காயம்பட்ட நபர்கள் ஆம்புலன்சில் ஆஸ்பத்திரிக்கு போனார்கள். அங்கு DSP என்னை விசாரித்தார். நான் நடந்த விவரத்தை சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.</u>

<u>மறு விசாரணை–</u>இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**<u>IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW - 30 / PW - 32** |
| Name : வெற்றிவேல் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **<u>28.07.2025</u>**

(1, 2, 4, 5, 6, 7, 8, 9, 13, 20, 21, 22, 23, 24, 26, 27, 29, 30 எதிரிகளுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

<u>இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department 09.12.2024** தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் பொன்பரப்பி காலனியில் குடியிருக்கிறேன். **2019** ல் பாராளுமன்ற தேர்தல் நடந்தது. அப்பொழுது நான் பச்சையப்பன் கல்லூரியில் **B.Com.,** மூன்றாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தேன். நான் பறையன் சாதியைச் சார்ந்தவர். ஆஜர் எதிரிகளும், இன்று ஆஜராகாத எதிரிகளும் என் ஊர்க்காரர்கள்தான். அன்று சுமார் **60** பேருக்கு மேல் வந்தார்கள். அவர்கள் எல்லாம் படையாச்சி சாதியைச் சார்ந்தவர்கள். சுமார் **6** வருடத்திற்கு முன்பு பாராளுமன்ற தேர்தல் நடந்தது. அப்பொழுது விசிக கட்சியில் திருமாவளவன் பானை சின்னத்தில் நின்றார். திருமாவளவனுக்கு எதிராக **ADMK** வில் நின்றார்கள். **ADMK** வை **BJP,** பாட்டாளி மக்கள் கட்சிக்காரர்கள் ஆதரித்தார்கள். நான் அந்த தேர்தலில் ஓட்டு போட்டேன். ஓட்டு போடுவதற்கு முன்பு ஓட்டு போடக்கூடாது என்று ஆஜராகியிருக்கும் எதிரிகளும் மற்றும் சிலரும் பானைக்கு ஓட்டு போடக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் நான் ஓட்டு போட்டுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அப்பொழுது **03.30** மணியளவில் ஒரு **60** பேருக்கு மேல் கட்டை, கம்பி, கழி, கல்

ஆகியவற்றோடு வந்தார்கள். அதில் ஆஜர் எதிரிகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். ஆஜர் எதிரிகளில் சிலர் பெயரை எனக்கு தெரியும். வெற்றி(வெற்றிவேல்), குமார்(ராஜகுமார்), இன்று வராத வாசுதேவன், சரவணன் ஆகியோர்களை தெரியும். அவ்வாறு கூட்டமாக வந்தவர்கள் என் வீட்டையும் உடைத்தார்கள். பறத்தேவிடியா பசங்க என்றும் சில கெட்டவார்த்தைகளாலும் திட்டினார்கள். கல்லால் தூக்கி அடித்ததில் என் வலது கண்ணில் அடிப்பட்டுவிட்டது. யார் கல்லால் அடித்தது என்று அடையாளம் தெரியுமா என்றால் தெரியாது. கும்பலில் இருந்தவர்கள் அடித்தார்களா என்றால் ஆமாம். வலது கண் புருவத்தில் காயம் ஏற்பட்டு தையல் போட்டார்கள். என் வீட்டின் முன்புற சீட்டை உடைத்துவிட்டார்கள். மேலும், 30, 40 வீடுகளுக்கு மேல் சேதப்படுத்திவிட்டார்கள். 13 பேருக்கு அடிப்பட்டுவிட்டது. அடிப்பட்டவர்கள் பெயர் சொல்ல முடியுமா என்றால் முடியும். அஜய், செல்வகணபதி, ரவி, முருகையா, வடிவேல், சம்பத், பிரகாஷ், அன்பழகன், மணிமேகலை ஆகியோர்கள். அடிப்பட்டவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயங்கொண்டம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு போனோம். நானும் சிகிச்சை பெற்றுக்கொண்டேன். என்னை அங்கு DSP விசாரித்தார். என் மாமா குணசீலன் தான் போலீசில் கேஸ் கொடுத்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.</u>

<u>மறு விசாரணை–</u>இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.